327

உ

பரமபதி துணை.

# சுப்பிரமணியர் தியானம்.

வள்ளியேசல் என்னும்

# ஆண்டிப்பண்டாரம் பாட்டு.



இஃது

மதுரை வடக்காவணிமூலவீதி, புஸ்தகவியாபாரம்

...சாமிக்கோனாரால்,

...க்ஸெல்ஸியர் பிரஸில்,

...பிக்கப்பெற்றது.

1922. [அணா 1

Q26:417
N22
183663

உ

பரமபதி துணை.

# சுப்பிரமணியர் தியானம்.

## வள்ளியேசல்.

### காப்பு-வெண்பா.

பொங்கரவம் பூண்டசிவன் புத்திரனைய் வந்திலகு

ஐங்கரவி நாயகவென் ஐயனே—துங்கமிகும்

வள்ளிதெய் வானைசுப்ர மண்யனே நற்பெருமை

தெள்ளியநூ லாகவருள் செய்.

### பல்லவி.

ஆண்டிப்பண்டாரம் உனை

வேண்டிக்கொண்டேனே பழனி (ஆண்)

### அநுபல்லவி.

தண்டாமரைப் பதனே சாமி சதானந்தனே

அண்டர்கள்தொழுதேற்றும் ஆறுமுக மேபழனி (ஆண்)

காண்டீபன் கண்பொறியிற் கதித்தாய் சரவணையில்

வேண்டிய நல்வரத்தை விரும்பித்தரும் பழனி (ஆண்)

### சரணம்.

சூரபத்மாசூரனின் துயர்தீர்த்துத்தேவர்கட்குத்

தீராப்பத்தியைக் கொடுக்கும் தேவா திருப்பழனி (ஆண்)

பிரமன்றனையழைத்துப் பிரணவத்தைக்கேட்கஅவன்

கிரமமாய்ச்சொல்லாததால் கிடத்தினைய்சிறையிலன்று ()

தெய்வானையை மணந்த திருக்கலி யாணவேலா

செய்நாதனே கருணை திருப்பரங்குன்று பழனி (ஆண்)

நாரதரின்சொல்லறிந்த நாழிகையில் வள்ளிக்காகப்

பாரதனில் வேடனகைப் பரிந்துசென்றவா பழனி (ஆண்)

தேன்தினைமா விக்குதென்று ஜெகஜாலஞ் செய்தகுகா

நான்தினந்துதிக்கும்படி நல்லமதி தாபழனி (ஆண்)

வையூர புரியேதிரு வாவினன் குடியில்வாழும்

ஐயாவுனை யன்றிவே ருருதுணை யோபழனி (ஆண்)

பார்க்கப் பவனிதிரு பாலாபிஷேகமெங்கண்

காக்கக் கடம்பவனங் காருண்ய மிகும்பழனி (ஆண்)

83463

---

### திருப்புகழ்.

கருவிலுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து

கலைகள்பல வேதெரிந்து மதனலே

கரியகுழன் மாதர்தங்க ளடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி
அரகரசி வாயமென்று தினமுநினை யாமனின்று
மறுசமய நீதியொன்று மறியாமல்
அசனமிடு வார்கடங்கள் மனைகடலை வாசல்நின்று
மனுதினமு நாணமின்றி யழிவேனோ
உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மாளரங்க
முலகளவு மான்மகிழ்ந்த முருகோனே
உபயகுல தீபவங்க விருதுகவி ராஜசிங்க
முறைபுகலி யூரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனரு ளால்வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதில்நின்ற பெருமாளே.

வேறு.

மருவே செறித்த குழலால் மயக்கி
மதனுகமத்தின் விரகாலே
மயலே யெழுப்பி யிதழே யருத்தி
மலைநேர் முலைக்கு ளுறவாகிப்
பெருகாத லுற்ற தமியேனை நித்தம்
பிரியாத பட்ச முடனேயென்
பிழையே பொறுத்து னிருதாளி லுற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே
குருவா யரற்கு முபதேசம் வைத்த
குகனே குறத்தி மணவாளா
குளிர்காண் மிகுத்த வளர்போத முற்ற
குடகா விரிக்கு வடபால்வாழ்
திருமா றனக்கு மருகா வுமைக்கோர்
சிறுவா கரிக்கு மிளையோனே
திருவே ரகத்தி லுறைவா யரக்கர்
சிரமே துணித்த பெருமாளே

## வள்ளி சுப்பிரமணியர் வாதாட்டம்.

(ஆண்டிப்பண்டாரம் மெட்டு.)

பல்லவி.

நாதனேசாமி எந்தன்
காதலின் க்ஷேமி பழனி (நாத)

அநுபல்லவி.

போதாதெய்வானையெனும் பூங்கொடியாள்தான்சொந்தமோ
வேதாகமந்தெரிந்தும் விபரீதஞ் செய்யலாமோ (நா)

அடியாளரை க்ஷணமும் அவளிடம் விடமாட்டேன்
படிமீதும்மோடொருகை பார்க்கிறே னினிப்பழனி (நாத)

பார்த்தவர்களென்னேயன்றோ பரிகாசம் பேசுகிறார்
மூத்தகுடி யாள்மீதில் மும்மரமே தோபழனி (நாத)

இளையகுடி யாளிடத்தில் எல்லார்க்கும் பக்ஷமுண்டு
வளையல்விற்க வந்ததெல்லா மறந்துபோச்சோபழனி (நாத)

காணுமல்நான் வந்தேனே கைமருந்து தான்தந்தேனே
தோணுமல் தெய்வானை சொந்தமோசொல் வாய்ப்பழனி (நாத)

தேடிவனம் நீர்வந்ததைத் தெரியாளோ தெய்வயானை
கூடிவந்த நாரதரைக் கூப்பிட்டுக் கேளும்பழனி (நாத)

ஒருவரறி யாமலேநான் உம்மைவரச் சொல்லவில்லை
கரிமுகத் தண்ணனுங்கள் கணபதியைக் கேளும்பழனி (நாத)

ஏண்கிளர்ச்சி கொள்ளுகிறீர் இதுவுமக்கு ஞாயமல்ல
நான்கிழக்கு முகமிருக்க நாயகனீ ராகலையோ (நாத)

---

மஞ்சு நிகர் குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு.

**பல்லவி.**

தாவடந்தந் தென்னைவிடடி பண்டாரமான
ஷண்முகவடி வேலனடி

**அநுபல்லவி.**

மாவடியை யேகிவந்த வள்ளியேநான்சென்றுவாரேன்
தேவரடியார்கள்போற்றும் சிவசுப்ர மண்யனனே (தா)

**சரணம்.**

குங்குமம் சவ்வாது பூச்சுக்கும்-குமுகுமென்ற
கொச்சிமஞ்சள் வாடைவீச்சுக்கும்
மங்கையே வள்ளியேமானே
வாதுபேச வேண்டாம்நானே
என்கை வேலி தையுன்னிடம்
இன்றுவைத்துச்சென்றுவாரேன் (தா)

வெள்ளியு முதைய மாச்சுதே - அடியாவான
வள்ளியே நேரமுமாச்சுதே
அள்ளியே விபூதிதாரேன்
அன்னமே சும்மாவிடடி
தெள்ளுதமி ழுக்குதவும்
திருச்செந்தூர் வேலனனே (தா)

ஆரபாரம் சேவல்கூவுதே—திருவணந்தல்
ஆரம்பூணும் நேரமாகுதே
கோரம்செய்ய வேண்டாம்வள்ளி
கோதையேநான் சென்றுவாரேன்
ஆருமறியாத வண்ணம்
சேரவேணும் பள்ளியறை (தா)

பத்தோம்பதாம் நூற்றுக்குமேல் என்ற மெட்டு.

**இருவருக்கும் தர்க்கம்.**

வடி:- ஜாதிமுறையொளியாது சாஸ்திரமும்பொய்யாது
மேதினியிற்குறவர்குல விம்புகளும் போகாது
மிரண்டுசத்தம்போடாதே குறக்கழுதை
இரண்டுகலியாணஞ்செய்தல் மிகப்பழுதே.
விடுவிடுநான்போகவேணும் விரைந்துதெய்வானைமனை
தொடுவதுநீதமல்ல சொன்னேன்பிடித்திடாதே
தோகைதெய்வயானையுடன் நீதோதா
தோகை மலைக்குறத்தியேநீதான்.

வள்ளி:-தோகமலைக்குறத்திஎன்று சொல்லவந்தாய் சுந்தரனே
நீ கையாலேமாலைசூட்டி நிச்சயிக்கவில்லையோசொல்
நீதந்தெரிந்து பதிற்சொல்வானேன்
போதனைசெய்தாளோ அத்தெய்வானை.

வடி:- கைமாயக்காரியடி கடைச்சாதிக்குறத்திவள்ளி
தெய்வானைபேச்சைப்பேச திறமுனக்குமேதடியே
தேவநா டாளுமரசன் மகளாம்
ஏவல் நீசெய்யுங்குபே ரன்மகளாம்.

வள்ளி:-யாராயிருந்தாலெனக் காவதென்னவேலவரே
காரானையுங்கள்ண்ணன் கணபதியைக்கேட்போமா
கசந்ததோவள்ளியிடுந் தேனமிர்தம்
அசந்ததோ அடுத்தடுத்து வந்ததுவும்.

வடி:- கணபதியைக்கேட்பதென்ன கத்திக்கத்திப்பேசியென்ன
குணமிருந்த தெய்வானையைக் கூடாதென்றுரைப்பார்
கூக்குரலிட்டலறதே குறமாதே
போக்குவரவில்லாமல் போகாதே.

வள்ளி:-எனக்குவழி சொல்லிவிட்டு எங்கேயும் நீர் போய்வரலாம்
தனக்கு வமையில்லாத சாக்ஷாதி ஷண்முகமே
சக்கரையோ மூத்தகுடியாளுமக்கு
அக்கரையில்லையவ ளாரெனக்கு.

வடி:- வள்ளி என்னடி யுனக்[illegible]ஞ்சினது
கள்ளியுந்தன் குலவி[illegible]வந்தது
கட்டிவந்ததுணி கருகுமணியல்லாது
பட்டியுனக்கே வேறு கெதியுமேது

வள்ளி:-குலத்தையிகழ்ந்துபேசக் கூடுமோஎன்துரையே
நலத்தையறியாமலோ நாரதர்சொற்கோடிவந்தீர்
நான்கொடுத்த தினைமாவுந்தின் றீரே
ஏன்தொடுத்தீ ரிகழ்ச்சிசெய்யக்குன் றீரே

வடி:- பித்தாளையோலையன்றிப் பிரிதொன்றும்செய்யவில்லை
வித்தாரம்பேசிநின்றால் வீண்வருத்தம்வாராதோ
விட்டாயில்லைகுறவர் வழக்கமதை
பட்டாடையேதடியே பகர்ந்தயிதை

வள்ளி:-தாலிகட்டும்வேளையிலே தகப்பனிட்டநகைகளல்லால்
வாலியிட்டருத்ராக்ஷ வடத்தையன்றிக்கண்டதில்லை
வாய்வீச்சுக்கென்ன குறைமாநிலத்தில்
தாய்பேச்சுக்கேட்டிடாத நாளொருத்தி.

வடி:- வீராதிவீரன்கந்தை வெள்ளாலிகாணுக்கந்தை
பாராதிருந்தேனிந்தப் பசபசப்பிங்கே வந்தே
பாழுந்தலைக்கேயெண்ணெய்ப் பதமுமுண்டோ
வாழுங்கானகத்திலே வாணியனுமுண்டோ.

வள்ளி:-ஆண்டிபோல்சுரக்குடுக்கை யதைத்தோளிலேபோட்டு
வேண்டியேபிச்சைதேடி வீதிவீதி யாயலையும்
மேலானஉங்கள்தந்தை செயல்தெரிவேன்
நாலாபுராணங்களுமே யறியும்.

வடி:- ஜாதிக்குறைபேசிடிலோ சாராயங்கள்குடித்து
வீதிக்கு வீதிநிற்கும் வெம்பூனைதனையடித்து
விரைவாகப்பைக்குட் போட்டுச் சென்றிடுவார்
இரவாரமுசலென்றுமே தின்றிடுவார்.

வள்ளி:-சாமர்த்யம்பேசவந்தீர் தகுமோஉமதுதந்தை
ஈமத்தெலும்புங்கண்ணப்பனெச்சிலையுந்திங்கலையோ
இதுதானோ பாலகனைக்கொன்றுசமை
இதுதான்தின்பேனெனச் சொன்னார்முன்னமே

வடி:- காசுகையிலில்லாவிட்டால் கட்டினபெண்ணீடுவைத்து
மாசுறவேபணம்வாங்கும் மானங்கெட்டகுறச்சாதி
மங்கையேவெட்கமுனக் கில்லையோடி
எங்கையுங்கேட்டதுண்டோ இந்தப்படி.

வள்ளி:- நோண்டிச் சிந்து.

ஐயா நீர் குறவர்குலம் தனையே
அவமதிப்பாகப்பேசத் துணிந்தீர் நலம்
மெய்யனே வுங்கள்குலம் சற்றே
விரித்துரைக்கிறேனதைக் கருதிக்கொளும்

எங்களுக்கோ அந்தக்குடிசு — உமக்கு
இருப்பிடமெது பூவிற் பொருப்பிடமே
தங்கவிடங் கிடையாது — இந்தத்
தாரணியில் நீர் சுத்தாதஇடமேது
வீதி வீதியாய்த்திரிந்து — பேமாடு
வெயிலிலுங்காற்றிலு முடல் கரிந்து
ஜோதியெல்லாங் குறைந்து — மேகஞ்
சொரிந்தாலொதுக்கிட மில்லாமல் நனைந்து
திரிவதையடியார்கள் — சித்தர்
திவ்வியகுணமுடை புண்ணியவான்கள்
திரிகால பூஜைகளும் — ஜெபதபஞ்
செய்யவா லயங்களுமே சிறப்பாய்க்கட்டி
வைத்தார்கள் பாவுமோசி — முத்து
வடமணிதடபுடல் களுமோசி
கொத்தாபரணமோசி — உமது
குடைகொடிவிருதுகள் முரசோசி
தேர்கரிபரியோசி — வருகிற
சின்னமேளங் கின்னரங்கள் தாசியோசி
ஊர்ஊராய்க் கோவிலோசி — இல்லை
ஒருஇடமேனு மொப்பன்தருமிடமோ
வெற்றிவேலொன்று சொந்தம் — அல்லால்
வேறுவெளிச்சங்க ளெல்லாமடியார் பந்தம்
மற்றின்ன முரைக்கவென்றால் — உங்கள்
மாதாவோபாழூர்பறைச்சி மாமனென்றால்
ஆயர்மனை தனில் வளர்ந்தோன் — சங்கம
ஆண்டியல்லோயுங்கள் தந்தை பாண்டிநகரில்
ஞாயமில்லாஉந்தன் ஜாதி — விபரம்
நான் தெரியாமலல்லோ சம்மதப்பட்டேன்
எங்கள் குறக்குலந்தெரிந்தும் — நீரும்
ஏன் வந்தீர்பரண்டியிற் பிச்சைக்காரன்போல்
திங்கலையோதினமாவும் — யானும்
தேடாமற்போட்டிருந்தேனே தனியாவும்
உங்களண்ணன் யானைரூபம் — வந்து
ஒடுக்கினரெந்தனது துடுக்கையெல்லாம்
திங்கள் நேருமவதனு — எந்தச்
சிறுக்கி மருந்தாலென்னை வெறுக்குறீர்

---

தக்கபாராங்கல்லைத் தூக்கி யென்ற மெட்டு.

**கண்ணிகள்.**

மாதரசே மனஸ் தாபம்—ஆகா
வந்திடலாகுமோ கோபம்
பூதவமேலவ மானம்—நான்
புகலுவேன் கேள்சமா தானம்.

வாழி விருத்தம்.

வெள்ளியங்கிரியான்வாழி வேலன்தெய் வானைவாழி
வள்ளியும் வாழிதேவர் வாழிமன் னுலகம் வாழி
தெள்ளிய நாலோர்வாழ்த்தும் செல்வனும் ராமசாமி
வள்ளல் ஈதச்சிட்டோங்கு மகிபனென் னூளும்வாழி.

---

முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸ் அவர்களியற்றிய,

இந்து தேசாபிமானிகள்

# செந்தமிழ்த் திலகம்.

(அழகிய ஆப்டோன் படங்களுடன்)

நமது பாரதநாட்டுச் சோதரர்களின் உரிமைக்கும், ஒற்று மைக்கும், நன்மைக்கும், தேச ஊழியம்செய்து வருவோர்களான மகாத்மாகாந்தி, தாதாபாய், நௌரோஜி, பாலகங்காதரத்திலகர், கோபாலகிருஷ்ணகோகேல் முதலிய பலதேச பக்தர்களின்மீது மதுரம் பழுத்துத் தேன்துளிக்கும் சந்தச்சுவை வாய்ந்த செந் தமிழ்ப் பாடல்கள். கேட்போர்செவிக்கினிமை பயக்கும் சிறந்த வர்ணமெட்டுகளின் அருமையும், பாடல்களி லமைந்துள்ள சொற் சுவை, பொருட்சுவை முதலிய பெருமையும் பாடுவோரையும் கேட்போரையும் இன்னும் ஒருமுறை பாடவும் கேட்கவும்வேண்டு மென்ற ஆனந்தக்கடலி லாழ்த்துமென்ப தநுபூதிசத்தை வாங்கி வாசிக்கும் நண்பர்களுக்கே நன்குவிளங்கும்.

1-ம் பாகம் விலை அணா 6, 2-ம் பாகம் விலை அணா 6.

இங்ஙனம்,

இ. ராமசாமிக்கோன்,

புக்செல்லர், வடக்காவணிமூலவீதி, மதுரை.

18663